தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 7, திருவள்ளுவர் ஆண்டு–2051
2020 மார்ச் 20, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.”

உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் மழையை நம்பி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அனைவரும் ஆட்சியாளரின் நீதி தவறாத நெறிமுறையை நம்பி வாழ்கின்றனர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

136—

சார்–கருவூலம்

***53379—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீ வில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் சார்–கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் சார்—கருவூலம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூடிக்கொடுத்த சுடர் கொடியாள், அன்னை ஆண்டாளின் அவதார உருவாய் வாழ்ந்து, நல்லாட்சிக்கு நானே சாட்சி என பொன்னாட்சி தந்திட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் காவலரே! ஏழைகளின் தலைவரே! தமிழக மக்களின் பாதுகாவலரே! தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். அமைதியின் திருவுருவம், தென்பாண்டிச் சிங்கம், தேனியின் தங்கம், ஜல்லிக்கட்டு நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஐயா ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். எங்கள் விருதுநகர் மாவட்ட மக்கள் வளர்ச்சிக்காக, அயராது உழைக்கும் பட்டாசு நாயகர், பால் வளத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அண்ணன் அவர்களையும் முதற்கண் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு வட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் புதிதாக அறிவிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. வத்திராயிருப்பு வட்டாட்சியர் அலுவலகத்தின் புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களின் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணி நடைபெறவுள்ளது. அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு தாலுகாவிற்கு சார்—கருவூலம் அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஐயா அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு தாலுகா அலுவலகத்திற்கு அருகாமையிலே இடமும்

2020 மார்ச் 20]

உள்ளது. இந்த ஆண்டே அங்கு சார்–கருவூலம் அமைத்துத் தந்து உதவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஐயா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற வட்ட தலைமையிடங்களில் சார்–கருவூலங்கள் அமைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. அந்த அடிப்படையில், கருவூலக் கணக்கு ஆணையாளரிடமிருந்து 59 சார்–கருவூலங்களுக்கு முன்மொழிவு இங்கு வரப்பெற்றிருக்கிறது. விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டமும் அதில் ஒன்றாக இருக்கின்ற காரணத்தினால் வரும் நிதியாண்டில் வத்திராயிருப்பில் அவசர அவசியம் கருதி, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையைப் பெற்று புதிய சார்–கருவூலம் இந்த ஆண்டில் உருவாக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியக் கனவை நனவாக்குகின்றவிதமாக சிறப்பாக ஆட்சி புரிந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களுக்கும், சார்–கருவூலம் இந்த ஆண்டே நிறைவேற்றித் தரப்படும் என்று இந்த அவையில் அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், ஜல்லிக்கட்டு நாயகர் அவர்களுக்கும் என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகஎனதுமனமார்ந்தநன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.